Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 22/2021 Date:04.02.2026
Deposition of witness for prosecution: PW 4 ( LW2)
Defence:
Court:

| Name | முனியாண்டி | Village | ஓடைப்பட்டி |
|---|---|---|---|
| Father/ Husband Name | நாகன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 48/2026 | Calling | கூலி |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 04.02.2026 TIME 04.45 **PM**

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

கடந்த 4 ஆண்டுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகமில்லை. ஒரு நாள் பகல் 02.30 மணியளவில் நான் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக எனது இருசக்கர வாகனத்தில் சமத்துவபுரம்- மேலப்பட்டிக்கு கிழக்கு- மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்த போது, தெற்கிலிருந்து வந்த இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் என் மீது மோதி, விபத்தை ஏற்படுத்திவிட்டார். எனக்கு கண்ணில் காயம் ஏற்பட்டு, மூக்கு, வாய் இருந்து இரத்தம் வந்தது, விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பதிவெண், ஓட்டுநர் பற்றிய விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 23.02.2020-ம் தேதி மதியம் 02.30 மணிக்கு எனது TN 37 AV 8646 XL இருசக்கர வானத்தில் ஓடைப்பட்டி சமத்துவபுரத்தில் இருந்து, வீட்டிற்கு செல்வதற்காக சமத்துவபுரம் ஆர்ச் அருகே கிழக்கு- மேற்கு நோக்கி சென்று, வடக்குபுறம் திரும்பும்போது, திடிரென வடக்கு-தெற்கு நோக்கி TN 47 J 6733 TVS Max 100 இருசக்கர வாகனத்தில் எதிரி அதிகவேகமாகவும், முரட்டு தனமாகவும் ஓட்டி வந்து எனது வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அதில் எனக்கு வலது கண்புருவம், மூக்கு, இடது பக்க காது ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு, இரத்தம் வந்தது என்றும், எனக்கு பின்னால் அமர்ந்து வந்த பிச்சை என்பவர் மேற்படி விபத்தில் காயம் பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், அருகில் இருந்த நபர்கள் உதவியுடன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 22/2021 Date:04.02.2026
Deposition of witness for prosecution: PW 5( LW3)
Defence:
Court:

| Name | ஈஸ்வரன் | Village | ஓடைப்பட்டி |
|---|---|---|---|
| Father/ Husband Name | சௌந்தரராஜன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 38/2026 | Calling | கூலி |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 04.02.2026 TIME 04.50 **PM**

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

வழக்கு விபரம் எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 23.02.2020-ம் தேதி மதியம் 02.30 மணிக்கு நான் சுரேஷ்கண்ணன், பாண்டியன் ஆகியோர் சமத்துவபுரம் ஆர்ச் அருகே இருந்த போது, முனியாண்டி TN 37 AV 8646 XL இருசக்கர வானத்தில் ஓடைப்பட்டி சமத்துவபுரத்தில் இருந்து, வீட்டிற்கு செல்வதற்காக சமத்துவபுரம் ஆர்ச் அருகே கிழக்கு- மேற்கு நோக்கி சென்று, வடக்குபுறம் திரும்பும்போது, திடிரென வடக்கு-தெற்கு நோக்கி TN 47 J 6733 TVS Max 100 இருசக்கர வாகனத்தில் எதிரி அதிகவேகமாகவும், முரட்டு தனமாகவும் ஓட்டி வந்து முனியாண்டி வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அதில் முனியாண்டிக்கு வலது கண்புருவம், மூக்கு, இடது பக்க காது ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு, இரத்தம் வந்தது என்றும், முனியாண்டிக்கு பின்னால் அமர்ந்து வந்த பிச்சை என்பவர் மேற்படி விபத்தில் காயம் பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், அருகில் இருந்த எங்கள் உதவியுடன் முனியாண்டி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.